# தேவனை ஒளியாயிருக்கிறார்

துதித்தல் — தேவனை ஒளியாயிருக்கிறார்: நமது ஆன்மிக பிரகாசமாகவும், எல்லாவற்றுக்கும் ஆதாரமாகவும் இருப்பவர்.
வேத வசனம்: 2 சாமுவேல் 22:29; 1 யோவான் 1:5; யோவான் 8:12

அறிக்கையிடுதல் —
நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும் இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாய் இருப்போம். அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியில் நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்.

1 யோவான் 6-7

ஸ்தோத்திரித்தல் —
இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிசகாசித்தார். 2 கொரிந்தியர் 4:6

மன்றாடுதல் —
நம்முடைய பிள்ளைகள்: உம்முடைய வசனம் _________ கால்களுக்குத் தீபமும், அவன்.'.அவள் உடைய பாதைக்கு வெளிச்சமுமாயிருப்பதாக. அவன்.'.அவள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதாவை மகிமைப் படுத்தும்படி, அவன்.'.அவள் உடைய வெளிச்சம் மற்றவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

சங்கீதம் 119:105 ரூ மத்தேயு 5:16லிருந்து

காணாமல் போனவரிகளின் இரட்சிப்பு: உம்மை பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக, _________ இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு அவன்.'.அவள் கண்களைத் திறக்கவும். அப்போஸ்தலர் 26:18லிருந்து

மாணவர்கள்: முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள். எபேசியர் 5:8

ஆசிரியர்கள்.'.நிர்வாகிகள்:
இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். 2 கொரிந்தியர் 4:6

பள்ளிக்கூடங்கள்: ... நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது; அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்.

2 தீமோத்தேயு 1:10

ஜெபத்தில் அன்னையர்கள்:
நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். *1 பேதுரு 2:9*

Moms in Prayer
INTERNATIONAL ™
சர்வதேச அன்னையர் பிரார்த்தனை குழு
momsinprayer.org